அபிமன்ய

JUPITER PICTURES CIRCUIT

நடிகர்கள்:

S. M. குமரேசன்	அபிமன்யு
P. V. நரசிம்ம பாரதி	கிருஷ்ணன்
S. V. சுப்பையா	சகுனி
M. G. ராமச்சந்தர்	அர்ஜுனன்
M. N. நம்பியார்	லக்கணன்
D. பாலசுப்ரமணியம்	துரியோதனன்
புளிமூட்டை T. R. ராமசாமி	கடோர்கஜன்
M. G. சக்ரபாணி	பலராமர்
N. S. நாராயண பிள்ளை	துரோணர்
M. K. முஸ்தபா	கர்ணன்
T. M. ராமசாமி பிள்ளை	ஜாங்கிலிமாமா
நாட். அண்ணாஜிராவ்	விதுரர்
K. ராமசாமி	சூரப்புலி
S. A. நடராஜன்	ஜயத்ரதன்
B. ராஜகோபாலய்யர்	தருமர்
N. சங்கரமூர்த்தி	அரவான்
T. D. சீனிவாசன்	துச்சாதனன்

மற்றும் பலர்

நடிகைகள்

U. R. ஜீவரத்தினம்	வத்ஸலா
M. R. சந்தானலக்ஷ்மி	சுபத்ரா
R. மாலதி	ருக்மிணி
C. K. சரஸ்வதி	ரேவதி
M. S. S. பாக்யம்	மாயப்பெண்
K. S. அங்கமுத்து	குடியானவள்
K. லக்ஷ்மி காந்தா	மாய நடனப்பெண்

மற்றும் பலர்

டைரக்ஷன் M. சோமசுந்தரம், & A. காசிலிங்கம்
உதவி T. K. ராமசாமி
கதை, வசனம் A. S. A. சாமி, B.A., Hons
பாட்டு சிவன், சுந்தர வாத்தியார், பூமிபாலகதாஸ்
சங்கீத டைரக்ஷன் { S. M. சுப்பையா நாயுடு, C. R. சுப்பராமன்
வாத்திய கோஷ்டி சென்ட்ரல் ஸ்டுடியோ
நடனம் V. ராகவய்யா K. R. குமார், C. தங்கராஜ்
ஸ்டுடியோஸ் கோவை சென்ட்ரல் ஸ்டுடியோஸ்

லேஸீஸ் ஜூபிடர் பிக்சர்ஸ்

ஒளிப்பதிவு	W. R. சுப்பாராவ்
உதவி	கோபால்
,,	G. K. ராமு
ஒலிப்பதிவு	A. கோவிந்தசாமி
உதவி	P. T. பசுபதி
,,	N. பழனியப்பன்
லாபரட்டரி	C. A. சுந்தர்ராஜ்
உதவி	N. கோனேயன்
,,	M. சுப்ரமணியம்
எடிட்டிங்	A. காசிலிங்கம்
உதவி	M. A. திருமுகம்
மேக்அப்	K. முகுந்த குமார்
உதவி	K. R. ராகவன்
,,	S. R. சுடலை
உடைகள்	T. S. கணபதி
ஆர்ட் & செட்டிங்	P. P. சவுத்ரி & M.P. குட்டியாப்பு
ஆர்டிஸ்ட்	V. S. ராவ்
மோல்டிங்	P. தேவலிங்கம்
ப்ரோடக்ஷன்	V. வாசுதேவன் & C. சுந்தரம்

திரையிலே, கதைப் போக்கு....

அபிமன்புவுக்கும், வத்ஸலாவுக்கும் அறிவு மலர்ந்த காலம் முதலே, அவர்களுக்கிடையே அன்பு மலர்ந்தது...பால்யம் பருவ இளமையாக மாறும் போது, அவர்கள் அன்பும் காதலாக மாறியது...

களங்கமற்ற காதலர்களை வையகமே காதலிக்கும் போது பெற்றோரடைந்த பெருமித ஆனந்தத்தைச் சொல்லி முடியுமா...? அந்த ஆனந்தப் பெருக்கிலே, அபிமன்யுவுக்கு வத்ஸலாதான் வாழ்க்கைத் துணைவி யென்று அவர்கள் வாக்கு மாற்றிக்கொண்டார்கள்...

நல்ல திட்டங்கள் யாவும் நினைத்த விதம் நிறைவேறினல் உலகம் இயங்குவதெப்படி...? அபிமன்யு வத்ஸலா சம்பந்தப்பட்ட ஆசை எண்ணங்கள் அனைத்துக்கும் காலனாக விளங்கினான், சகுனி.

காதல், காதலிலே கனியும் உள்ளங்கள், கனியும் உள்ளங்களைக் கண்டு களிக்கும் ஆசை நெஞ்சங்கள்—இவையெல்லாம் சகுனியின் சதி நிறைந்த இருதயத்திலே, இடம்பெற முடியுமா...? இடம் பெற்ருல், அவன்தான் சகுனியாக இருக்க முடியுமா...? வத்ஸலாவை ஒரு வெறும் அரசியல் கருவியாக கருதிவிட்டான், சகுனி... அவன் சூழ்ச்சி மூளை நினைத்தது இப்படி:—துரியன் மகன் லக்கணனுக்கும் பலராமன் மகள் வத்ஸலாவிற்கும் மணம் முடித்துவிட்டால் துவாரகையும், அஸ்தினபுரியும் சம்பந்தி வீடுகளாகி விடும் பாண்டவர் தனித்து விடுவார்கள்...பலராமன் சகாயம்... அவர்களுக்கிருக்காது...பிறகு துரியோதனனே சாஸ்வத சாம்ராஜ்ய சக்ரவர்த்தியாகவும்—தானே அவனுடைய நிரந்தர ஆலோசனை யாளனாகவும் இருந்துவிடலாம்...என்று.

நினைத்ததுதான் தாமதம்...புறப்பட்டான் துவாரகைக்கு...கண்டான் பேராசைக்கார பலராமரை...சாதுர்யப் பேச்சினல் மயக்கினான் அவரையும் அவன் மனைவியையும்...அவ்வளவுதான், நிச்சய

மாகிவிட்டது திருமணம் வத்ஸலாவிற்கும் மண்டூக லக்கணனுக்கும்.........

எல்லாம் தெரியும் கண்ணனுக்கு...ஆனல் அவன் காட்டிக் கொள்ளவில்லை எதையும்...ருக்குமணியிடம் சிரித்தான்...கொந்து துடித்த வத்ஸலாவிடம் கையாண்டி பேசினன்...அவன் போக்கு புரியவேயில்லை.........

விதுரர் ஆஸ்ரமத்திலே விவாக அழைப்பைப் பார்த்து மனமொடிந்து போனுள் சுபத்திரை...... ஆனல் அபிமன்யு அசரவில்லை...பரம கோழையைக் கூட பராக்கிரம சாலியாக்கும் காதல், அபிமன்யுவை அஸகாய சூரனுக்கி விட்டது...துள்ளிக் கிளம்பினுன் துவாரகைக்கு...சுபத்திரை தடுத்தாள்...பயனில்லை...

பீமன் ஏற்படுத்திக் கொண்ட அரக்கர் குல தொடர்பில் தோன்றியவன், கடோர்கஜன். வல்லரக்கன் அரவான் ஆகியோரும் அவனைச் சேர்ந்தவர்கள் தான்...அவர்களுடைய துணையும், மாய சக்திகளும் அபிமன்யுவிற்குக் கிடைத்தது...ஆனல் அதற்காக அவன் முதலில் கொஞ்சம் துன்புறவேண்டியதிருந்தது.........

ககன மார்க்கமாக கடோர்கஜன் யாவரையும் துவாரகை சேர்ப்பதற்கும் துரியோதனுதியர்—அது தான் மாப்பிள்ளை வீட்டார்—அங்கே வந்து இறங்குவதற்கும் சரியாக இருந்தது...சம்பந்தி வீட்டாருக்கு வரவேற்பு வெகு விமரிசை...அதில் கலந்துகொண்டான் கண்ணன்கூட.........

மருமகனைப் பார்க்க மாயன் போனபோது மனம் கொதித்து பேசிவிட்டான் அபிமன்யு...அவனை சமாதானம் செய்து, வத்ஸலாவை அவனுக்கே மாலை சூட்டி வைப்பதாக உறுதி கொடுத்து அதற்கான சில திட்டங்களை கூறுகிருன்...பழைய பண்டங்களைப் பெற்றுக்கொண்டு புதுப் பண்டங்கள் மாற்றும் விநோதமான மாயாபஜார்...கல்யாண வீட்டிலே மாயா வத்ஸலாவாக நடித்து ராக்ஷச காதல் புரிந்து லக்கணனின்

எலும்புகளை நொறுக்கிய கடோர்கஜனின் மந்திர வேலைகள்......கட்டிலோடு கடத்தி வந்து, உண்மை வத்ஸலாவை கண்குளிர அபிமன்யுவிற்குக் கல்யாணம் செய்வித்த விசித்திரம்......இவை யாவும் கண்ணன் காட்டிய வழிகளே.........

அபிமன்யுவிற்கும் வத்ஸலாவிற்கும் மனம்போல் மாங்கல்யம் நடத்தி வைத்தது மட்டுமல்ல...அதே சந்தர்ப்பத்தைக் கொண்டு கிருஷ்ணன் சகுனியை மட்டந் தட்டினன். துரியோதனுதியரின் துர்எண்ணங் களுக்கு சரியான எச்சரிக்கை தந்தான். முக்கியமாக, மாதா திரௌபதியை மானபங்கம் செய்ததற்கு மன மார பழி தீர்த்துக் கொண்டான்.

இப்படியாக, சகுனியின் முதல் முயற்சி முடிந் தது முழுத் தோல்வியோடு.

அபிமன்யு-வத்ஸலா தம்பதிகளும் ஆனந்த வாழ்வு ஆரம்பித்து விட்டார்கள், விதுரர் ஆஸ்ரமத்திலே...

இதற்கு சிறிது காலத்திற்குப் பின்...பாண்டவ ருடைய அஞ்ஞாத வாசம் முடியவே, அவர்கள் சார் பாக, மீண்டும் நாடு வேண்டி கிருஷ்ணன் தூது வந் தான் துரியனிடம்...கல்யாண சமயத்திலே கண் ணன் அவர்கள் முகங்களைக் கருக்கியது ஞாபகம் வந்தது சதிகார சகுனிக்கு......தூதனுக வந்த கிருஷ்ணனை வஞ்சகமாக கொலை செய்ய திட்ட மிட்டான்...கண்ணனும் மாண்டு போவான், பாண்ட வரும் நாடாளும் ஆசையை அத்துடன் மறந்துவிடு வார்கள் என்று அவன் கணிதம் செய்தான். இதுவும் தவறிவிட்டது...கொலைக்காகச் செய்த சதி கைகூட வில்லை என்பது மட்டுமல்ல, பாண்டவர் சார்பாக பரந் தாமன் போர்ச் சங்கு ஊதிவிட்டான்.

பாரதப் போர் ஆரம்பித்து 12-நாட்கள் ஆகிவிட் டது, கௌரவர் பக்கம் ஒரு வெற்றிகூட இல்லை... அகூர்களத் பாசறையில் தளபதி துரோணரை தாக்ஷிண்யமின்றி எல்லோரும் தாக்குகிறுர்கள், கௌர வர் தோல்விகளுக்காக......உடனிருந்து உறவாடி

துரோணர் அவர்களைக் காட்டிக் கொடுப்பதாக, பயங்கர குற்றம் சாட்டுகிருன், சகுனி... துரோணர் மானஸ்தன்... ரோச உணர்ச்சியினுல் தூண்டப்பட்டு தனது கடைசி ஆயுதமாக சக்ரவியூகம் வகுப்பதாக சொல்லி விட்டு, போர்களம் போய்விடுகிருர்.........

இந்த தர்ம சங்கடத்திற்கு, எதிர்பாராத ஏற்பாட்டிற்கு, பாண்டவர் சற்றும் தயாராக இல்லை... காரணம், துரோணரின் சக்ரவியூகத்தைத் தகர்த்தெரியக் கூடியவன் ஒருவனே. அந்த ஒருவன்...... அதாவது அர்ச்சுனன்... அப்போது அங்கில்லை-சம்சத்தகரோடு யுத்தம் செய்ய போயிருந்தான்.........

அர்ச்சுனன் மகன் அபிமன்யுவிற்குத் தெரியும் சக்ரவியூகத்தின் அமைப்பு முறைகள்; ஆக அடுத்த நாள் போருக்கு அவனே போகலாமென்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. தர்மருக்கு பிடிக்கவில்லை இந்த யோசனை... அபிமன்யு சிறுவன்; மேலும் தந்தை இல்லாத சமயம் தனித்து அவனை துரோணர் போன்ற ஒரு தளபதியிடம் அனுப்பலாகாது என்று எண்ணினுர், ஆனுல் பெரும்பான்மை அபிப்பிராயம் ஜெயித்தது.........

அபிமன்யுவிற்கு ஒரே ஆனந்தம்... சமரில் கலந்து கொள்ள அவனுக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததே...... ஆனுல் அப்போதுதான் மணமான வத்ஸலாவுக்கு ஆசை நாயகனை யுத்தகளம் அனுப்ப சீக்கிரத்தில் மனம் வரவில்லை... கலங்கினுள்... பெருந் துயரடைந்தாள்... தாய் சுபத்திரை கூடத்தான் தயங்கினுள். ஆனுல் வீரனுடைய ஆசையை யாருக்கும் தடுக்க இயலவில்லை... வெற்றித் திலகமிட்டு அனுப்பி வைத்தார்கள் அவனை.........

போர்க்களத்திலே துரோணர், கர்ணன் துர்சாதனன் போன்ற மாபெரும் வீரர்களெல்லாம் ஒருவர்பின் ஒருவராக மண் கௌவிக்கொண்டிருந்தனர்... அபிமன்யு அடுக்கிக்கொண்டிருந்த வெற்றிகளைக் கேட்டு கேட்டு சுபத்திரைக்கும் வத்ஸலாவிற்கும் ஆனந்த வெறி........

ஆனால் சகுனிக்கு மட்டும் பொறுக்க முடியவில்லை இந்த தோல்விச் செய்திகளை...ஜெயத்ரதனை தன்னுடன் அழைத்துக்கொண்டு அவனே புறப்பட்டான் சமர் நடக்கும் இடத்திற்கு. அவன் செய்து கொண்டான், ஒரு பயங்கர சங்கல்பம், எப்படியும் அபிமன்யுவை அன்று அழித்து விடுவதென்று.........

சகுனி நினைத்தபடியே, துரோணர் மறுபடியும் திணறிக்கொண்டிருந்தார் அபிமன்யுவிடம்...அதற்கு மேல் பொறுக்க முடியுமா அந்த இறக்கமற்ற அரக்கனுக்கு...? வஞ்சக வேலையை ஆரம்பித்தான்...ஜெயத்ரதனைக் கொண்டு புறம் நின்று தாக்கச் செய்து...புவி புகழ்ந்த வீரனை மண்ணிலே வீழ்த்தினான்......

விவரமறிந்த வத்ஸலாவிற்கு சப்த நாடிகளும் அடங்கிவிட்டன. அலறிப் புடைத்துக் கொண்டு ஓடினாள் களம் நோக்கி...கதி கலங்கி போன தாய் சுபத்திரையும் ஓடினாள், வெறி பிடித்தவள் போல......

சம்சத்தகரை ஒடுக்கிவிட்டு அப்போதுதான் திரும்பிக்கொண்டிருந்த விஜயன் காதிலும் விழுந்தது விஷயம்...புத்திரசோகம் அவன் புத்தியைக் கலக்கி விட்ட நிலையில் அர்ச்சுனன் ஏதாவது செய்துவிட்டால் பாரதப்போர் எப்படி நடக்கும்; பரந்தாமனின் பல திட்டங்கள் எப்படி நிறைவேறும்...? ஆக ஆரம்பித்து விட்டான் அவனும் கபட நாடகத்தை.........

தனஞ்சயன் தற்கொலை செய்ய முயற்சித்ததை தடுத்தது...இதன் விளைவாக அவன் செய்த சபதம், சபதத்தை நிறைவேற்றி வைக்க, சக்கராயுதன் செய்த சமயோசித வேலைகள்......மைந்தனைக் கொன்றவனை விஜயன் பழிதீர்த்துக் கொண்டது...ஆகிய சம்பவங்கள் கதையின் இறுதி சம்பவங்கள்............



அபிமன்யு—பாட்டுகள்

அபிமன்யு—வத்ஸலா

வத்ஸலா:—புது வஸந்தமாமே வாழ்விலே
யினி புதிதாய் மணமே பெறு;
வோமே (புது

அபிமன்யு:—புது வஸந்தமாமே வாழ்விலே
யினி புதிதாய் மணமே பெறுவோமே

அபிமன்யு:—இனிதாம் நமதே இகவாழ்வே (இனி

வத்ஸலா:—ஈராகு மேனி ஒருயிரே (ஈரா

அபிமன்யு:—காதல் வாழ்வே காணுமின்பம்

வத்ஸலா:—காதல் வாழ்வே காணுமின்பம்

அபிமன்யு:—ஓதுவோமிதை ஊராரறியவே

அபிமன்யு / வத்ஸலா } ஓதுவோமிதை ஊராரறியவே (புது

ருக்மிணி

கரஹரப்ரிய ஆதி

1. உங்கள் முகார விந்தம் காணுந்தோறும்
   என் உள்ளம் மலர்ந்திடுமே
   பங்கஜம் ஆதவனைக் கண்டு மலர்ந்தாலதில்
   விந்தையுண்டோ

2. அரும்புமிள நகையிலே நீ இந்த
   அண்ட சராசரம் ஆக்கியளிப்பாய்
   திரும்புமுன் ஆணையின்றி அசையாதுன்
   தொண்டே என் பிறவிப்பயன்

3. ப்ரேமை மிகும் ஜீவேசா உன் சீர்பாத
   சேவையே பேரானந்தம்
   பிறவிகள் தோறும் இந்தப் பேதையைப்
   பிரியாத வரந்தாரும்

வத்ஸலா

ராகம்-காபி　　　　　　　　　　　　தாளம்-ஆதி

பல்லவி

புது மலரின் அழகே ஆனந்தம்-புது
மண மங்கை விளையாடும் வஸந்தம்

அநு பல்லவி

மதுவினிலே பெருங் காதலினால்-சுழல்
வண்டுகளின் ரீங்கார கீதமுடன்

சரணம்

தெள்ளருவிதவழ் ஓடை தனிலே-இளந்
தென்றல் இனிமையும் கூவியழைக்கும்
மயில் துள்ளித் தோகை விரித்தாடு மழகும்
குயில் குகூ குகூ வென்று பாடுமழகுங் கலந்து
(புது மலரின்)

வத்ஸலா

மதனா மதிவதனா மா மோஹனா
ஆ என் சிந்தை ஏங்கினேன் அமைதி
நீங்கியே

வாய்மை தந்தை மாறினார் வஞ்சகம்
கொண்டுமே

நாதா நீர்தான் என்றுமே நினைந்தேன்

சோதனை ஏனோ நாடிவந்து நேர்மையாய்
அபலை என்னை யாள்

பாரில் நீரன்றியே யாரையும் நினையேன்
வீரனே இது தருணம் சேரமன மில்லையானால்
மன்னா உயிரும் வேண்டேன்

சுபத்ரா

பல்லவி

தழைத்தோங்கும் தாமரைக் கண்ணா!
சரணமே கதியென் அண்ணா அருள் (தழை

அநு பல்லவி

வழி எதுவும் தெரியான் என் பாலன்
வாழ்விலும் பாவிகள் சூழ்வினையோ - (மகன்
அறியேன் துணைநீ ஆதரிப்பாயே (தலை

சரணம்

கௌரவர் சபைதனில் நொந்தே நின்ற
த்ரௌபதை உயிர்வாழ மானம் தந்தாய்
கோபம் தாபம் யாவையும் வென்றாய்
கோலாகலமாய் கோகுலம் வந்தாய்
யாரறிவார் மகிமை புவிமீது
அபய மென்றவர்க் கொரு பயமேது
அருள்வாய் இனிவேர் யாரபிமானத் (தலை

அபிமன்யு

புது வஸந்த மாமே வாழ்விலே யினி
புதிதாய் மணமே பெறுவோமே (புது

மாதர் சூடும் பூவே உனை
மாலையாக சூட்டுவேனே
மாதினோடு நேயமாக
ஓதுவாயோ நீ ஒரு
காதல் சேதி தானே
மாதை யானும் கூடுவேனே
தேவாதி தேவனுணை (புது

மாலையோடு நல் மோதிரமே செல்
சேதி சொல்லவே தான்
ஏதுவரினும் காதலிதனை நான்
மீட்டு வருவேனே
போர் வந்தாலும் பொன்னாள் தனையே
சேர்வேன் யார் எதிரே-எ
மோதிரமே நீ சொல்லுவாய் (புது

வத்ஸலா

வ: புது வஸந்தமாமே வாழ்விலே யினி
புதிதாய் மணமே பெறுவோமே
தூதனே எந்தன் மோதிரமே நீ
க்ஷேமந்தானே தீரன் என் நாதன்
தீதிலா மலர் மாலையும் வாராய்
சேதியாதென நீயே சொல்வாயே
காதல் நோயால் வாடுகின்றாரோ
காணவே யுளமே அவர்தான்
துடித்தாரோ (புது

மோ: எதுவரினும் காதலி உனை நான்
மீட்டு வருவேனே
போர் வந்தாலும் பொன்னாள் உனையே
சேர்வேன் யார் எதிரே

வ: தேடியே வருவார் என் நாதனும்
தேர் மனமே நீ
ஆடிப்பா டிடுவாயே நீயே
கூடுவா ரெனை சீராகவே
தடையும் ஏதினி பார் மிதிலேதான்
தடையும் ஏதினி பார் மிதிலே நான்
சாற்றுவேன் முரசொலித் திடவே
தினமே தான் (புது

மாயாபஜார்—பாட்டு

ஏ...ஐயா மாரே வாங்க
ஓ...அம்மா மாரே வாங்க
அண்ணன் மாரே தம்பி மாரே
அத்தான் மாரே வாங்க

இங்கே வாங்க சும்மா வாங்க
எல்லாம் வாங்க ஏ...
சியாங் தேசத்து பொய்யாங் கடைத்
தெருவைக் காண வாங்க

கையால் வாங்கிடும் பொருளுக்கெல்லாம்
காசு வேண்டாம் வாங்க
வாங்க...வாங்க...

சந்தைக் கடையல்ல இந்தக் கடையிலே
சட்டி பானைகளை தந்தாக்க

சிந்தைக்கிடம் தரும் வெங்கலப் பித்தளை
வெள்ளிப் பாத்திரம் தருவாங்க
இங்கே தருவாங்க

கையில்லாத கன்னுன் செய்த வேலே
இதெல்லாம் - கையிலாத

கடு கடுப்பில்லாம எடுக்கப் புடிக்க-
அடுப்பில்லாம சமைக்கப் புடிக்க - கை

(வசனம்)

பெண் : என்னையா தடவிப் பாக்கிறே...லொட்டு
...லொட்டு...லொட்டு...லொட்டுன்னு
தட்டிப் பாரே தலையிலே முட்டிப்பாரே

ஆண் : என்னம்மா இடிக்கிறே....

பெண் : இல்லையா கொடுக்கிறே....

ஆண் : நல்லாக் கொடுத்தே....

பெண் : ஜூம்...தக...தரிகிட தவிலடி

பாட்டு : சொப்புக் கொடங்க வேணுமா
கொப்பரைச் சட்டி வேணுமா
அண்டா குண்டா அடுக்குப் பானை
ஆனைக் கரண்டி வேணுமா
கையில்லாத கன்னுன் செய்த வேலே
பொளங்கிப் பாத்தா தெரியும் பின்னுலே
இந்தக் கடைதனிலே பழைய கந்தந்
துணி கொடுத்தா
தங்கச் சரிகையிலே தகட்டு சால்வை
தருவாங்க

நூலில்லாம நெசவு செய்த வேலே
எல்லாம் - நூலில்லாமல்
நோட்டம் பாத்துப் போட்டுப் பாருங்க
தெரியும் பின்னாலே...தெரியும்
பின்னாலே - நூலில்லாமல்

(வசனம்)

பெண் : வாங்க மாப்பிள்ளே வாங்க...

ஆண் : என்னடா இழுக்குது...

ம. ஆண்: இல்லீங்க அழைக்குது...

பாட்டு : பாருங்க நூலில்லாம நெசவு செய்த
வேலே
நோட்டம் பாத்து போட்டுப் பாருங்க
மேலே - நூலில்லாமல்
பாவு நூலில்லாமலே மேவி நெசவு
செய்த பட்டுப் பீதாம்பரத்தைப்
பாரடா...பாரடா...பாரடா
ஆனே விலே கொடுத்து அழகாக
மேலே போட்டா
அவளும் மதிப்பா நல்ல ஜோரடா
ஜோரடா...ஜோரடா

(பாட்டு)

கல்லு வணங்கினாலும் சொல்லு வணங்கிடாத
கம்பீர துரியோதனன் பிள்ளேயே பிள்ளேயே
பிள்ளேயே
நல்லது உங்களுக்கு நான் சும்மா வாங்கித்
தாரேன்
இல்லே யின்னா...அடிப்பேன்...கொள்ளேயே
கொள்ளேயே...கொள்ளேயே
வீசும் மணமகனே...வில் வளேக்கும்
மம்முதனே

ஆசை பெருக்குதையா...அன்பிருந்தா
போதுமையா
காசு பணம் வேண்டாமையா
ராசாத்தி ராசா...கையிலே தாரேன்...
கழுத்திலே போட்டுக்குங்க

(வசனம்)

ஒருவன் : ஏ...எப்படிடா

மற்றவன் : சவாசு

பாட்டு : மந்திரத்தாலே மருந்தாலே-இங்கே
தந்திரத்தாலே கிழவிகளை
சுந்தர மோஹினி மேனகை போலெதிர்
தோணும் குமரியா செய்வாங்க
சீவிச் சினுக் கெடடி வங்காரு
சித்திரம்போல் மையிடடி செங்கமலம்
காவிக்கல்லை ஓரச்சு வாயில் தீட்டடி
சுருக்கா - காவி

கம்மலொடு ஜிமிக்கி எடுத்து மாட்டடி
காதிலே - கம்மலொடு

இந்தப் பாட்டிக்கு (சீவி)
என்னையா உத்துத்துப் பாக்கிறே
உனக்கென்ன வேணுமுன்னு கேக்கிறே

ஹிஹி ஹிஹி ஹிஹி

(பாட்டு)

உன்னையும் குமரனாய் ஆக்கரே
இந்த உத்தமியை ஜோடி சேக்கரே
தாடியை பிச்சு எறிஞ்சுட்டா-மீசைதான்
கருப்பாகும் சாயமிட்டா

கூடி இவளோடு வாழ்ந்திட்டா
அனுகூலம் பின்னால் தெரியுமே
பாவராக தாள கட்டினிலே-நல்ல
மெட்டினிலே இளம் மெல்லியர்கள்
காவிய ஓவிய சிற்பங்களின் முறைகண்டு
களிக்க நடம் புரிவர் இங்கே

வணங்காமுடி மன்னன் மகனாரே
வருவீர்...வருவீரே...இளைப்பார
வருவீர்...வருவீரே
இணையாய் உம்முடன் உறவாடி
இனிக்க இனிக்க கனித்து சுவைத்து ரமிக்க
அழைக்கிறாள் ஒரு மாது

வருவீர்-வருவீரே-இளைப்பார - வருவீர்

சிமிட்டி-சிமிட்டி-மயக்குதீர்
உம்மை தெரியுமையாவே கண்ணே - சிமிட்டி

குமுட்டிக்காய் போல் கசந்ததுன் நேசம்
கூடாதினிமேல் உன்னோடு சகவாசம் - சிமிட்டி

கனவில் வந்தென்னை கலந்தணைந்தது
கவனம் தானில்லையோ...ஐயா - கனவில்

என்னை மறந்திவள் இச்சை கொண்டீரே
எல்லாம் தெரிந்தென்னை பொய் சொல்லி
வென்றீரே - கனவில்

வத்ஸலா

ஜெயமே ஜெயமே ஜெயமே
தயங்காதே மதி மயங்காதே
தீரமிகும் மகாவீரன் மகாசூரன்
யென் மணவாளன் (ஜெய

வீரர் கோடி தாளாது மாய்வார்
தேர்கள் மோதி தூளாகுவார்
வீரிடும் யானைகள் விரிந்து கொடி படை
பொடிபட வாளால்
வீசுவாரிணை யாரே போரில் (ஜெய

வத்ஸலா

வானோர் சேனைகளும் வந்தெதிர் நின்றாலும்
வாரி சூரையாடி வாகையும் சூடி

சந்த்ர மாமுக சுந்தர மாரன்
சமரில் வென்று யென் நேரினில் வருவாரே

வீணையும் நாதமும் போல் மானில மீதினிலே
மாறாயின்பம் வாழ்வினிலே தருவாரே

தீதணுகாமல் நீயருள்வாயே
கண்ணா! கண்ணா!! கண்ணா!!!

Mercantile Press, Mannady Madras.

மோகினி

வேலைக்காரி
கதை, வசனம் :
அறிஞர்
C.N. அண்ணாத்துரை M.A.
டைரக்ஷன் :
A.S.A. சாமி